அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் (கூ/பொ) செயல்முறைகள்

பிறப்பிப்பவர்– திரு.சி.சுவாமி முத்தழகன் எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,

நி.மு.எண்8551. /அ1/2023, நாள். .08.2024

பொருள்– பள்ளிக் கல்வித்துறை – கருணைஅடிப்படை – பணிவரன்முறை – அரியலூர் மாவட்டம் – ஓலையூர், அரசு உயர் நிலைப்பள்ளியின் இளநிலை உதவியாளர் திருமதி.க.வசந்தி என்பாருக்கு – இளநிலை உதவியாளர் பணிநிலையில் – 07.08.2023 முற்பகல் முதல் – பணிவரன்முறை வழங்கி ஆணையிடல் – சார்பு.

பார்வை– 1. அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2673/அ1//2020, நாள்.31.07.2023

2 அரசு கடித எண் 4419/தொ.க.1(1)/2024,1 நாள் 17.,05,2024

3. சென்னை6, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் ந.க.எண் 26062./ ஜே /இ2/2023, நாள்.22.05.2024

4. சென்னை6, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் ந.க.எண்000917/ ஜே /இ2/2023, நாள்.04.07.2024

–

அரியலூர் மாவட்டம் பூவாணிப்பட்டு(மேற்கு) ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த போது 10.05.2016 ல் காலமான திரு.வி.மணிகண்டன் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.க.வசந்தி என்பவருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறைகளின்படி, கருணை அடிப்படையில் அரியலூர், மாவட்டம், ஓலையூர், அரசு உயர் நிலைப்பள்ளியில் இளநிலைஉதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 07.08.2023 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். பார்வை–4ல் காணும் செயல்முறைகளில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி, திருமதி.க.வசந்தி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணி நிலையில், அன்னார் பணியேற்ற நாளான 07.08.2023 **முற்பகல்** முதல் பணிவரன்முறை செய்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்படுத்தி வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

01. அன்னார் தமது இளநிலை உதவியாளர் பணிநிலையில், மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தினை மேலலுவலருக்கு மனநிறைவு அளிக்கத் தக்க வகையில் முடிக்கப்படல் வேண்டும்.

02.அரசு அலுவலர்களுக்கான பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

03.தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெறல் வேண்டும்.

04.தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது ஊதிய உயர்வு மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.